உ

கடவுள் துணை.

பூலோக வசியமென்னும்

# புஷ்பப்பாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், ஜார்ஜ் டவுன். ஸி.

கோல்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் ஜார்ஜ். டவுன். ஸி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, ரூளை, போண்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோண்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும்; அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கெயார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோன்டன் பிரஸ், ரூனை போல்டு மதராஸ்.

உ

கடவுள் துணை.

பூலோகவசியமென்னும்

# புஷ்பப்பாட்டு.

விநாயகர் - துதி.

நேரிசை வெண்பா.

பூலோகவசியமெனும் புஷ்பரஞ்சிதபாட்டை
சாலவேசெந்தமிழால் சாற்றவோ-கோலமயில்
கந்தனுக்குமூத்தக் கரிமுகவன்பொன்னடியை
சிந்தையினில் நெஞ்சேநினை.

சிந்து.

ஒய்யார மானபுஷ்பம்
ஒண்டொடியே செண்டுபுஷ்பம்
தையலர்கள் வாங்கும்புஷ்பம்
தருகுமணம் பாராய்புஷ்பம் ஒய்

## புஷ்பப்பாட்டு.

குண்டுமல்லி கொட்டருமல்லி
   கோதையரே வூசிமல்லி
கண்டவுடன் ஆசைப்பூட்டும்
   கன்னியரே ஜாதிமல்லி ஓய்

நந்தியாவட்டைபுஷ்பம்
   நறுமலர் கொன்றைபுஷ்பம்
விந்தையுள்ள பாரிஜாதம்
   வஞ்சியரே வாங்கும்புஷ்பம் ஓய்

மன்மத பாணபுஷ்பம்
   மடுக்கலறி ரோஜாபுஷ்பம்
இன்பமுள்ள இருவாட்சி
   யேந்திழையே வாங்கும்புஷ்பம் ஓய்

வெந்தாமரை செந்தாமரை
   வாசனைக ளுள்ளபுட்பம்
பெண்கோதை மார்களெல்லாம்
   பூரித்து வாங்கும்புஷ்பம் ஓய்

காதவழி வாடைவீசும்
   கண்மணியே மருக்கொழுந்து
மேதினிமார்கள்மெச்சும்
   மேலான அடுக்கலரி ஓய்

மஞ்சா சாமந்தியுடன்
மணமுள்ள வெண்சாமந்தி
கொஞ்சு கொங்குமந்தாரை
கோதையரே வாங்கும்புஷ்பம் ஒய்

அவ்வலரி செவ்வலரி
ஆசைப்பூட்டும் நன்மருவு
செவ்விதழ் மாதருக்கு
சிறந்தநல்ல புட்பமது ஒய்

மணம்போலும் மனந்தருகும்
மனோரஞ்சித மானபுட்பம்
இனமாகவே முடிக்க
இருக்குமனம் மாரும்புஷ்பம் ஒய்

மயில்கொண்ணே சரக்கொண்ணே
மகிழ்ச்சியுள்ள பன்னீர்புட்பம்
வையகத்தோர் தான்மகிழும்
வாடாத மல்லிபுட்பம் ஒய்

சம்பங்கி புஷ்பமோடு
சதிராகும் ரேக்தச்செண்டு
நம்பியிதை வாங்குங்கண்டு
நாணயமாய்க் கோர்த்தசெண்டு ஒய்

கண்டவற்கு ஆசைபூணும்
  கடிமலராம் மொசுடம்புஷ்பம்
கொண்டைக்கேற்ற கோர்வைபுட்பம்
  கொடுக்கமணம் பாரும்புட்பம் ஓய்

மந்தாரை ஜாதிபுஷ்பம்
  மனதுக்கேற்ற நல்லபுட்பம்
விந்தையுள்ள வானபுட்பம்
  மூலனைக்கொருநிறமாம்புட்பம் ஓய்

சந்திரகாந்தி சூரியகாந்தி
  சபைகள் நிறைந்தபுட்பம்
அந்தமுள்ள நிறங்கொடுக்கும்
  அநேகவித மானபுஷ்பம் ஓய்

அந்தியிலே விற்கும்புஷ்பம்
  ஆசைகொண்டு வாங்கும்புட்பம்
சொந்தமான சோதிபுட்பம்
  தொடுத்தால் மணக்கும்புஷ்பம் ஓய்

வில்வமலர் தும்பமலர்
  விமலருக்கு யேற்றமலர்
நெல்லியிதை வாங்குமலர்
  உருதிபூசை கொள்ளுமலர் ஓய்

தாமரைப் புட்பமொடு
நைதலரே அல்லிமலர்
கோமளமே வாங்குமலர்
குருவேர் மணத்தைப்பாரும் ஒய்

பம்பாயி தேசமதில்
பாங்காகப் பூத்தபுட்பம்
இன்பமுரு மணந்தருதும்
யேந்திழைமார் சூடும்புஷ்பம் ஒய்

பத்தினிமார் முடிக்கும்புஷ்பம்
பலதேச ஜாதிபுஷ்பம்
கொத்துசர மானபுட்பம்
கோர்க்காத விடுதிபுட்பம் ஒய்

அரசர்மகிழும்புஷ்பம்
ஆரமாகக் கட்டும்புட்பம்
வரிசைக் குகந்தபுட்பம
வதுவைக் கலங்காரபுட்பம் ஒய்

தேவர்க் குகந்தபுட்பம்
தேசமெங்கும் நிறைந்தபுட்பம்
ஆவலாக கன்னியற்கு
ஆசைக்கொடுக்கும் புஷ்பம் ஒய்

பூசைக் குகந்தபுட்பம்
பூவையர்கள் சூடும்புட்பம்
நேசமது செய்யும்புட்பம்
நீயேவாங்கும் கண்ணேபுட்பம் ஓய்

புகழோங்கும் புட்பப்பாட்டு
புவியோங்குந் தானறிய
மகிழ்செஞ்சி யேகாம்பரம்
மறையுங்கவி படித்தோர்வாழ்க ஓய்

வாழ்க வாழ்க
வாசித்தோர் தானும்வாழ்க
நேசமுடன் கேட்டவரும்
நீடூழிகாலம்வாழ்க. ஓய்

பூலோக வசியமென்னும் புஷ்பப்பாட்டு
முற்றிற்று.